ஓய்வூதியச் சுற்றறிக்கை இல : 09/2015 (திருத்தம் V)

எனது இல : ஓய்/சுற்றறிக்கை/2023
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2023.12.01

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள் / முப்படைத் தளபதிகள்
பிரதேச செயலாளர்கள் மற்றும்
உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்கள்

**2016.01.01 ஆம் திகதிக்குப் பின் பொதுச் சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு, சேவையில் இருக்கும் போது இறந்த அலுவலர்களின் தகுதிபெற்ற சார்ந்திருபவர்களுக்கான மரணப் பணிக்கொடை வழங்குதல்**

2016.01.01 க்குப் பின்னர் பொதுச் சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் மற்றும் சேவையில் இருக்கும் போது மரணமடைந்தவர்கள் மற்றும் சேவையில் இருக்கும் போது எதிர்காலத்தில் அத்தகைய அலுவலர்கள் இறந்துவிட்டால் அவ் அலுவலர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 2 ஆ (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மரணப்பணிக்கொடைத் தொகைக்கான உரிமையை வழங்க ஒப்புதல் வழங்குவது என 2023.11.06 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

02. ‘தேசிய பங்களிப்பு ஓய்வூதிய நிதியச் சட்டம்’ நடைமுறைக்கு வரும் காலம் வரை இந்த ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

03. எனவே, 2016.01.01 ஆம் திகதிக்குப் பின்னர் பொதுச் சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய நியமனங்கள் வழங்கப்பட்டு, பணியில் இருக்கும்போதே இறந்த அலுவலர்களை சார்ந்திருப்பவர்களுக்கு மரணப் பணிக்கொடை வழங்க வேண்டும் என்ற நோக்கில், 09/2015 மற்றும் 09/2015 (திருத்தம் III) ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கைகளின் படி ஓய்வூதிய ‘முகாமைத்துவ முறைமையின்’ மூலம் பின்வரும் ஆவணங்களுடன் மரணப் பணிக்கொடைக்கான விண்ணப்பத்தை (PD5). ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.

மறைந்த அலுவலரின்,

i. மரணச் அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப் பிரதி
ii. பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப் பிரதி
iii. தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதி
iv. வரலாற்று தாளின் சான்றளிக்கப்பட்ட பிரதி
v. கடந்த முறை பெறப்பட்ட சம்பள விவரங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதி
vi. 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி தயாரிக்கப்பட்ட சம்பள மாற்ற கடிதம்
vii. அனைத்து சார்ந்திருப்பவர்களினதும் வங்கி புத்தகங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதி
viii. அவர் இறந்த நேரத்தில் அலுவலரின் சட்டபூர்வ தங்கிவாழ்வோர்களின் அறிக்கை (பிரதேச செயலாளரால் சான்றளிக்கப்பட்ட). தங்கிவாழ்வோர்கள் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தால் வேலைக்காகப் பதிவுசெய்யப்பட்ட திகதியையும் திருமணமானவராக இருந்தால் திருமணத் திகதியையும் பதிவிடவும்.
ix. 06/2015 (திருத்தம் I) ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின்படி முழுமையாக பூரணப்படுத்திய PD 4 மாதிரி விண்ணப்பம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

04. மேலே குறிப்பிட்டுள்ள இறந்த அலுவலர்களில் தங்கிவாழ்பவர்களுக்கு மரணப் பணிக்கொடை தொகையை உடனடியாக வழங்கும் பொருட்டு தங்களது ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பம்
ஏ. ஜகத் டி. டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர் - த.த.த
2. பிரதமரின் செயலாளர் - த.த.த
3. அமைச்சரவைச் செயலாளர் - த.த.த
4. செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - த.த.த
5. கணக்காய்வாளர் நாயகம் - த.தே.ந